மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 667/22 |
| பெயர் | : | முத்துகிருஷ்ணன் (PW4) |
| த/பெ. க/பெ | : | |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

(A1 Manikandan A2 Murugan A3 Selvakumar are present. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the18 th day of November 2024

**முதல் விசாரணை**

1)நான் தற்போது தூத்துக்குடி தென்பாக காவல்நிலையத்தில் சிறப்பு உதவிஆய்வாளராக பணிபுரிகிறேன்.

2) 2017 ஆம் வருடம் புதியம்புத்தூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது கடந்த 18.06.2017 ம் தேதி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த இண்டிமேஷன் படி தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று அரியநாயகன் மகன் வீரமணிகண்டன் என்பவரது காயத்தகவலை பெற்று மேற்படி நபரிடம் நடந்த சம்பவத்திற்கு வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து 23 மணிக்கு நிலைய குற்ற எண். 124/2017 U/S.294(பி),323,324,506(2) இதச வாக வழக்கு பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா ஆ 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)**

3) அசல் புகார் வாக்குமூலத்தையும் முதல் தகவல் அறிக்கையும் இணைத்து கனம் JM–1 தூத்துக்குடி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

4) அதன் பின்னர் வழக்கு கோப்பின் ஒரு நகலை உதவி ஆய்வாளர் திரு. பொன்ராஜ் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1)அரசு மருத்துவமனையில் இருந்து 19 மணிக்கு காயத்தகவல் கிடைத்தது.தகவல் கிடைத்த போது நான் காவல்நிலையத்தில் இருந்தேன். எங்கள் காவல்நிலையத்தில் இருந்து அரசு மருத்துவமனை 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.பொதுவாக காவல்நிலையத்தில் இருந்து அரசு மருத்துவமனைக்கு 45 நிமிடத்தில் இரு சக்கர வாகனத்தில் செல்லலாம்.அசா1 என்னிடம் வாக்குமூலம் கொடுத்தபோது தான் குடித்துவிட்டு வந்ததால் தனது மனைவி வீட்டை விட்டு வெளியேறியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2)வீரமணிகண்டன் மற்றும் அரியநாயகம் முத்துலெட்சுமியின் வீட்டுக்கு சென்று வாய் தகராறில் ஈடுபட்டதை புகார் வாக்குமூலத்தில் அசா 1 சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.புகார் வாக்குமூலம் 21 மணிக்கு பதிவு செய்யப்பட்டது.முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது 23 மணி.மேற்படி இரண்டு மணிநேர கால தாமத்திற்கு சிறப்பு காரணம் உண்டா என்றால் போக்குவரத்து நேரம் தான் மேற்படி இடைவெளி.

3) நான்சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அசா 1 என்னிடம் புகார் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் அதின் அடிப்படையில் நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.